## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு சொத்தினது நியாயமான பெறுமதியானது கொண்டு செல்லப்படும் பெறுமதியில் போதியளவு மாற்றத்திற்குள்ளாகின்றதா அல்லவா என்பதை இனங்காண்பதற்கு 3 அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவையேனும் மீள மதிப்பீடு செய்யப்பட வேண்டுமாயினும், சபையின் ரூபா 188,241,276 க்கான நிலையான சொத்துக்கள் அவ்வாறு மீள மதிப்பிடவில்லை.

### 1.2.2 அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்கப்படாத உதவு தொகை

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கத்தவர் நிதியக் கணக்கு மீதி ரூபா 153,631,425,664 என நிதிக் கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்டபோதும், அத் தினத்தில் உள்ளவாறு அங்கத்தவர் கணக்குகளில் உண்மையாக வரவு வைக்கப்பட்டிருந்த தொகை ரூபா 143,079,139,946 ஆகும். நிதியம் இத்தினத்தில் உள்ளவாறு பெற்றிருந்த அங்கத்தவர் கணக்கில் செலவு வைக்கப்படாத தொகை ரூபா 10,552,285,718 ஆகும். இத்தொகையில் ரூபா 4,099,849,873 ஏறக்குறைய கடந்த 32 ஆண்டுகளின்போது பெறப்பட்டனவாகும். எனினும், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்கப்படாதிருந்த அங்கத்தவர் உதவு தொகை இதுவாகும். எஞ்சிய ரூபா 6,452,435,845 மேற்குறிப்பிட்ட பெறப்பட்ட உதவுதொகைகளுக்குரியதும் அவ்வப்போது அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்கப்பட வேண்டியதுமான

வட்டியாகும். இதுவரை கணக்கிலிடப்படாத பெறப்பட்ட உதவு தொகை தொடர்பான காலப் பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| **பெறப்பட்டு அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்கப்படாதிருந்த மீதிகளது காலப் பகுப்பாய்வு** | **இதுவரை கணக்கிலிடப்படாத உதவு தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| 1 முதல் 5 ஆண்டுகள் வரை | 2,170,507,917 |
| 5 முதல் 10 ஆண்டுகள் வரை | 824,534,055 |
| 10 முதல் 15 ஆண்டுகள் வரை | 417,178,073 |
| 15 முதல் 20 ஆண்டுகள் வரை | 226,346,967 |
| 20 முதல் 25 ஆண்டுகள் வரை | 240,248,355 |
| 25 ஆண்டுகளக்கு மேற்பட்டவை | 221,034,506 |
| மொத்தம் | 4,099,849,873 |

* மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும் அங்கத்தவர் தொகைக்குரிய அங்கத்தவர்களின் விபரம் மாதாந்தம் அல்லது 6 மாதங்களுக்கு ஒரு முறை நிதியத்தில் கிடைக்கப் பெறுவதாகவும் அடுத்து வரும் ஆண்டின் பெப்ரவரி 28 அன்றே அங்கத்தவர் தொகை கணக்கிலிடப்படுவதாகவும் அங்கத்தவர்களது கணக்குகளில் இடப்படுவது தாமதமாவதற்கு சேவை நாடுநர்கள் தமது தொகையை செலவு வைப்பதற்குரிய ஊழியர் விபரங்களை வழங்காமை, தரப்படும் தரவுகள் தெளிவுற்று இருத்தல், சில நிறுவனங்கள் கூட்டாக ஒரே காசோலை மூலம் பணத்தை வழங்குதல், அதனைப் பகிர்வதில் சிரமம் ஏற்படுதல் முகாமைத்துவத்தில் ஏற்படும் மாற்றங்களால் முன்னைய காலப்பகுதிக்குரிய தகவல்களைப் பெறமுடியாது போதல், பெருந்தோட்டங்களுடன் இணைந்த ஊழியர் பெயர்களில் நிலவும் சிக்கல்கள் மற்றும் செயற்படாதிருக்கும் அங்கத்தவர்களது பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பினும் விபரம் வழங்கப்படாதிருத்தல் போன்றன காரணங்களாக அமைவதாகவும், இவ்வாறு அவ்வப் போது கணக்கிலிடப்பட வேண்டிய அங்கத்தவர்களது கணக்குகளில் வட்டி செலவு வைக்கப்படாதிருப்பதாகவும் சபையின் தலைவர் அறிவித்திருந்தார்.

### 1.2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

(அ) பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ள 1995 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்து வரும் கோரப்படாத மரண நலன் கணக்கு மீதி ரூபா 7,573,890 வரையும் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்து வரும் திருப்பிச் செலுத்தும் நலன் கணக்கு மீதி ரூபா 13,905,162 வரையும் மீளாய்வாண்டு முடிவில் தொடர்ந்து அதிகரித்திருந்தன. அங்கத்தவரது மரணத்தின் பின்னர் அவருக்குரிய நலனுக்கு ஒருவருக்கு மேற்பட்டவர்கள் உரித்துடையவர்களாவதும் அவர்கள் ஒன்றாகச் சமூகமளிக்காமையும் போதியளவு எழுத்து மூல தகவல்களைச் சமர்ப்பிக்காமையும் காரணமாக உரித்துடையவர் யார் எனச் சரிவரத் தீர்மானிக்கும் வரை தேங்கி நிற்கும் கோரப்படாத நலன் கணக்கு மீதியில் 2013 ஆம் ஆண்டில் 5 உரித்துடையோருக்கு ரூபா 391,744 கொடுப்பனவு செய்யப்பட்டதாகவும் நலன்களைக் கோருபவர்களின் வங்கிக் கணக்கு விபரம் தவறுகளை உள்ளடக்கியதாயின் அவற்றைத் திருத்தி மீண்டும் சமர்ப்பிக்கும் வரை தேங்கி நிற்க இடமளித்து மீண்டும் அனுப்பும் நலன் கணக்கு மீதியில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 3,257,115 கொடுப்பனவு செய்யப்பட்டது எனவும் இதற்கான பதிலாகச் சபையின் தலைவரால் அறிவிக்கப்பட்டது.

(ஆ) 2001 ஆம் ஆண்டு தொடக்கம் அதிகரித்தவாறிருந்த 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திருப்பிச் செலுத்தும் நலன் கணக்கு மீதியாகிய ரூபா 5,149,573 தீர்த்து வைக்கப்படாதிருந்தது. “நலன் பெறுநர்களுக்கான கொடுப்பனவு காசோலை மூலம் வழங்கப்பட்ட போதும், வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி நிரூபணமாகும் இம் மீதியில் 2013 ஆம் ஆண்டில் 22 விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 468,728 நலனாகக் கொடுப்பனவு செய்யப்பட்டது” எனவும் இதற்குப் பதிலளித்த தலைவர் தெரிவித்திருந்தார்.

(இ) சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு வாகனக் கடன் வழங்குகையில் முன்னைய ஆண்டில் கூடுதலாக வழங்கப்பட்ட தொகையில் மீளாய்வாண்டு முடிவிலும் அறிவிடப்படாதிருந்த தொகை ரூபா 61,770 ஆகும்.

(ஈ) சேவையிலிருந்து நீங்கி 1 முதல் 13 ஆண்டுகள் கழிந்துவிட்ட 18 உத்தியோகத்தர்களிடமிருந்து 2013 ஒக்டோபர் 04 ஆந் திகதியளவில் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 260,281 ஆகும்.

(உ) காசுக் கட்டளைகள் வாயிலாக அனுப்பப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய உதவு தொகையில் 2013 ஒக்டோபர் 04 ஆந் திகதியளவில் அஞ்சல் திணைக்களத்தின் தாமதம் காரணமாக ரூபா 1,218,909 நிலுவை அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| **(அ)** | 1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.1.6 மற்றும் 2.3 ஆம் பிரிவுகள் | இப் பிரமாணங்களுக்கு முரணாக நிறுவனத்தின் 9 உத்தியோகத்தர்களது சொந்த பயணங்களுக்கு சபையானது மீளாய்வாண்டின் போது ரூபா 4,108,740 எரிபொருளுக்காகச் செலவிட்டிருந்தது. |
| (ஆ) | **பொது முயற்சிகள் மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | |
| | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 1998 மார்ச் 18 ஆந் திகதிய 130 ஆம் இலக்கம், 1997 நவம்பர் 19 ஆந் திகதிய 26/47 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2011 ஒக்டோபர் 18 ஆந் திகதிய 56 ஆம் இலக்க பொது முயற்சிகள் தொடர்பான தொழிற்படு சபையினது கூட்டத் தொடரின் குறிப்புகளது 19 ஆம் பிரிவு | கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சட்ட சபைகளது ஊழியர்களுக்கு 4.2% வீதத்தில் கடன் வழங்கப்படலாகாதெனினும், சபை அதற்கு முரணாகச் செயற்பட்டு மேற்குறித்த வட்டி வீதத்திலும் அதற்குக் குறைவாகவும் ஊழியர்களுக்குக் கடன் வழங்கியிருந்தது. 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மேற்படி வட்டி வீதத்தில் வழங்கப்பட்ட கடனில் ரூபா 413,101,257 நிலுவையாக இருந்தது. |
| **(இ)** | 2003 ஜூன் 06 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 8.7 ஆம் பிரிவு | உத்தியோகத்தர்களது நம்பிக்கைப் பொறுப்பு வருமானத்தில் அறவிடப்பட்டு, உள்நாட்டு இறைவரி |

| | |
|---|---|
| | ஆணையாளர் நாயகத்திற்கு 2012 ஆம் ஆண்டின் பொருட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டிய உழைக்கும்போதே செலுத்தும் வரியாகிய ரூபா 1,310,687 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது சபையின் நிதியிலிருந்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 9.12 ஆம் பிரிவு | சபை அறிமுகஞ் செய்து வைத்த நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறான அங்கீகாரத்தைப் பெறாது நலனோம்பல் செயற்திட்டத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 16,847,846 செலவிடப்பட்டிருந்தது. |
| **(ஈ)** 2000 ஜனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ 5 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் 2011 ஒக்டோபர் 18 ஆந் திகதிய 56 ஆம் இலக்க பொது முயற்சிகள் தொழிற்படு கூட்டத்தின் குறிப்புகளினது 16 ஆம் பிரிவு | பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது ரூபா 81,067,392 ஊக்குவிப்புப் படியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதனை நிவர்த்தி செய்யுமாறு குறித்த பொது முயற்சிகள் தொழிற்படு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. |
| **(உ)** 2011 திசெம்பர் 22 ஆந் திகதிய 47 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | இச் சுற்றறிக்கையின் 1 மற்றும் 2 ஆம் பிரிவுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது மிகையூதியமாக ரூபா 48,727,577 வழங்கப்பட்டிருந்தது. 8 ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்குப் புறம்பாக மிகையூதியம் வழங்கப்படுமாயின் அமைச்சரவையின் முன் கூட்டிய அங்கீகாரத்தைப் பெற வேண்டுமாயினும், சபை அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| **(ஊ)** இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நி.பி 104 | வாகன விபத்துக்கள் 45 தொடர்பான இழப்பைக் குறிக்கும் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

**1.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 390,537,752 இற்கான நிலையான சொத்துக்களை நேரடியாக உறுதி செய்வதற்கான பொருட் கணிப்பு அறிக்கை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.6 போதிய அதிகாரததினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் 1999 முதல் சபையால் அமுலாக்கப்படும் நிதி நடைமுறைக் கோவைக்கு மீளாய்வாண்டு முடிவுவரை நிதி அமைச்சினதோ அல்லது பொதுத் திறைசேரியினதோ அங்கீகாரம் பெறப்படவில்லை. இந்நடைமுறைக் கோவையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகள் என்பவற்றிற்குப் புறம்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறாது சபையின் உத்தியோகத்தர்களுக்கு 1993 முதல் கோல உடைகள் வழங்கப்பட்டிருந்தன. இதன் பொருட்டு மீளாய்வாண்டில் ரூபா 6,236,582 செலவிடப்பட்டிருந்தது. கடந்த 5 ஆண்டுகளின் போது அவ்வாறு அங்கீகாரமின்றி நிதியத்திலிருந்து கோல உடைகளுக்கென ரூபா 36,575,879 செலவிடப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் விளைந்த மிகை ரூபா 12,147,948,316 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 11,307,220,814 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுகையில் மீளாய்வாண்டினது மிகையில் ரூபா 840,727,502 அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. வட்டி வருமானம், பங்கிலாப வருமானம், நிகர நடப்புப் பெறுமதிச் சீராக்கல்களின்போது ஏற்பட்ட பெறுமதி அதிகரிப்பு என்பனவே இவ்வாறான அதிகரிப்புக்கான காரணமாகும்.

**2.2 பகுப்பாய்வுடனான நிதி மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டிற்கான சபையின் மிகை அதிகரிப்பு 7.44 சதவீதமான போதும், அங்கத்தவர்களுக்கான நலன் மாறாது 10 சதவீதமாகவே இருந்தது. இவ்வாறாக 2008 முதல் 2012 வரை வழங்கப்பட்ட நலன்களது விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **2012** | **2011** | **2010** | **2009** | **2008** |
|---|---|---|---|---|---|
| அங்கத்தவர்களுக்கான நலன் | 10% | 10% | 12.5% | 13% | 12% |

(ஆ) நிதியத்தின் அங்கத்தவர்களின் உரிமைத்துவம், மொத்த உதவு தொகை மற்றும் அறிவிக்கப்பட்ட வட்டியின் திரண்ட பெறுமதியினது 5 ஆண்டுகளின் போதான வேறுபாடுகள்

கடந்த 5 ஆண்டுகளின் போது சபையின் அங்கத்தவர்களது மொத்த உரித்து அவ்வுரித்துக்கான உதவு தொகைகள் மற்றும் திரண்ட வட்டியாக பகிரப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **மொத்த உதவு தொகை** | **திரண்ட வட்டி** | **அங்கத்தவர்களின் உரித்து** |
|---|---|---|---|
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 2008 | 44,301 | 44,568 | 88,869 |
| 2009 | 49,834 | 53,223 | 103,057 |
| 2010 | 56,616 | 63,236 | 119,852 |
| 2011 | 64,054 | 71,432 | 135,486 |
| 2012 | 72,773 | 80,858 | 153,631 |

மேற்படி தகவல்களின்படி, 2012 ஆம் ஆண்டளவில் சபையின் அங்கத்தவர்களுக்கு உரித்துடைய மொத்தத் தொகையில் 47 சதவீதம் உதவு தொகையாக அமைந்திருந்தது. 53 சதவீதம் வட்டியாக அமைந்திருந்தது. அவ்வாறே, 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அங்கத்தவர்களுக்கு உரித்துடைய தொகை 2012 ஆம்

ஆண்டின் போது 13.39 சதவீதம் அதிகரித்திருந்தது. அவ்வாண்டில் மொத்த உதவு தொகை 13.61 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயலாற்றல்

### 3.1.1 செயற்பாட்டினது செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டு இறுதியில் செயற்திறனது நிலைமை பின்வருமாறிருந்தது.

| விபரம் | உள்ளவாறான எண்ணிக்கை | நிதியத்தின் செயற்பாட்டுடன் தொடர்புடைய எண்ணிக்கை | அதன் சதவீதம் % |
|---|---|---|---|
| தனியார் மற்றும் அரைவாசி அரச துறையைச் சார்ந்த ஊழியர்கள் | 3,832,840 | 2,200,000 | 57.40 |
| சேவை வழங்குபவர்கள் | 227,612 | 70,194 | 30.84 |
| நிதியத்தின் அங்கத்தவர் கணக்குகளது எண்ணிக்கை (மில்லியன்) | 9.8 | 2.2 | 22.45 |

2012 ஆம் ஆண்டு முடிவில் இலங்கையில் தொழில் புரிபவர்களில் 2,593,151 சுயதொழில் புரிபவர்களை நிதியத்தில் இணைத்து அவர்களுக்குச் சலுகை வழங்குவதற்கான போதிய வேலைத்திட்டம் சபையால் தயாரிக்கப்படவில்லை. ‘‘பிரதேச அலுவலக இணையதளத்தின் உதவியுடன் சுயதொழில் புரிபவர்களை இந்நிதியத்தில் இணைத்துக்கொள்வதற்கான வேலைத்திட்டம் படிப்படியாக செயற்படுவதால் 2013 ஆம் ஆண்டு முடிவில் சுய தொழில் புரிபவர்களது அங்கத்துவத்தில் விசேட அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாகவும் அச்சுயதொழில் புரிபவர்களை நிதியத்தில் சேர்த்துக் கொள்ளும்போது சுய விருப்புடன் உதவு தொகையை வழங்க வேண்டியேற்படுவதே இந்த அதிகரிப்புக்கான தடையாக உள்ளது’’ எனவும் இதற்குப் பதிலளித்த தலைவர் தெரிவித்திருந்தார்.

(தகவல் : 2012 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கி அறிக்கை)

(ஆ) கடந்த 5 ஆண்டு காலத்தின் போது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அமுல்படுத்திய புலமைப்பரிசில் வழங்கும் நடவடிக்கைக்குரிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **நிதியத்தின் உதவு தொகைக்குப் பங்களிப்பு வழங்கிய செயற்படு அங்கத்தவர்களது எண்ணிக்கை** | **தமது பிள்ளைகளின் பொருட்டுப் புலமைப் பரிசில்களைப் பெற்ற அங்கத்தவர்களது எண்ணிக்கை** | **5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் கிரயம்** | **உயர் தர புலமைப்பரிசில் கிரயம்** | **மொத்த புலமைப்ரிசில் கிரயம்** |
|---|---|---|---|---|---|
| | | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 2008 | 2,100,000 | 2,497 | 26,084,760 | - | 26,084,760 |
| 2009 | 2,100,000 | 3,000 | 46,811,006 | - | 46,811,006 |
| 2010 | 2,100,000 | 3,000 | 45,385,680 | - | 45,385,680 |
| 2011 | 2,100,000 | 6,669 | 74,051,599 | 23,640,000 | 97,691,599 |
| 2012 | 2,200,000 | 6,962 | 75,775,685 | 23,604,000 | 99,379,685 |

கடந்த 5 ஆண்டு காலப்பகுதியின் போது ஒட்டுமொத்த அங்கத்தவர்களான 2,200,000 பேரில் வரையறைக்குட்பட்ட 22,128 பேருக்கு மாத்திரமே இவ்வாறாக புலமைப் பரிசில்களை வழங்குவதற்குச் சபை நடவடிக்கை எடுத்திருந்தது. மீளாய்வாண்டு வரை, கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலாதுள்ள நிதிய அங்கத்தவர்களது பிள்ளைகளுக்குக் கல்வியை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைச் சபை கவனத்திற் கொள்ளாதிருந்தது.

### 3.1.2 முதலீடும் முதலீட்டு வருமானமும்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 135,099 மில்லியன் ஆகவிருந்த முதலீடுகள் கொள்வனவுகள், முதிர்ச்சியடைதல் என்பவற்றிற்கான சீராக்கல்களின் பின்னர் ஆண்டின் இறுதி மீதி ரூபா 150,000 மில்லியன் ஆக அதிகரித்திருந்தது.

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) குறுகியகால ரிபோ முதலீடு**

குறுகியகால ரிபோ முதலீடாகக் குறிப்பிடப்பட்டு 2006 ஆம் ஆண்டு தொடக்கம் நெடுங்கால இருதரப்பு உடன்படிக்கை இணக்கப்படி குறிப்பிட்டதொரு அரச வங்கியால் சபைக்கு வழங்கப்பட்ட சேவைக்காக சலுகையாக வழங்கப்பட்ட ரூபா 500,000,000 வைப்பிற்கு 2012 ஆம் ஆண்டில் 364 நாள் திறைசேரி உண்டியலுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதமேனும் கிடைக்காது போனமையால் ஏறக்குறைய ரூபா 12,011,821 வட்டி வருமானத்தை 2012 ஆம் ஆண்டின்போது சபை இழக்க வேண்டியதாயிற்று. இதற்குப் பதிலளித்த தலைவர் “ 2013 ஆம் ஆண்டின் மார்ச் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் முறையே ரூபா 10 மில்லியன் மற்றும் ரூபா 490 மில்லியன் என மொத்தமாக ரூபா 500 மில்லியன் ஆகிய இந்த முதலீடு முறையே 15 சதவீத மற்றும் 12 சதவீத வட்டிக்குக் குறித்த வங்கியின் நிலையான வைப்புகளில் இடப்பட்டுள்ளதாகத்” தெரிவித்திருந்தார்.

**(ஆ) பங்குச் சந்தை முதலீடுகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் 1 ஆம் கட்ட 2 ஆம் கட்ட பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட 115,385,085 பங்குகளுக்கான ரூபா 8,620,461,119 முதலீடு சம்பந்தமாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) 2013 ஜுன் 30 இல் உள்ளவாறு 1 ஆம் தர மற்றும் 2 ஆம் தரப் பலகை எனப் பங்குச் சந்தையில் உத்தியோகபூர்வமாக நிரலிடப்பட்ட 83 கம்பனிகளின் 107,312,668 பங்குகளில் சபை ரூபா 8,013,793,452 முதலீடு செய்திருந்தது. இம் முதலீடுகளில், 68 கம்பனிகளின் 83,036,582 பங்குகளிற்கான ரூபா 6,333,036,059 முதலீடானது பங்குச் சந்தையில் ரூபா 4,864,387,677 வரை ரூபா 1,468,648,382 வீழ்ச்சிக்குள்ளாகியிருந்தது.

(ii) 2012 ஆம் ஆண்டின்போது பங்குச் சந்தை ஓரளவு பின்னடைவிற்கு உள்ளாகியிருந்தது. 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட பங்குச் சந்தை முதலீட்டு வருமானம் பின்வருமாறு குறைவடைந்திருந்தது.

| ஆண்டு | கம்பனிகளின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை | முதலீட்டுத் தொகை ஜனவரி 01 இல் உள்ளவாறு | பெறப்பட்ட முதலீட்டு வருமானம் | வருமான சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | % |
| 2010 | 116 | 41,549,265 | 2,719,879,864 | 1,308,502,652 | 48.1 |
| 2011 | 130 | 78,211,481 | 5,204,377,279 | 703,052,274 | 13.5 |
| 2012 | 107 | 101,999,123 | 7,713,939,116 | 324,179,030 | 4.2 |

2012 ஆம் ஆண்டின் போது இந்த தொகையை இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியலில் முதலீடு செய்திருப்பின் பெறக்கூடியதாகவிருந்த வருமானத்தின் அடிப்படையில் இம் முதலீட்டின் மூலம் ரூபா 577,580,453 மதிப்பிடப்பட்ட வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது. இதற்குப் பதிலளித்த தலைவர் “பங்குச் சந்தையில் முதலீட்டு வருமானம் அதிகரிப்பதைப் போன்றே இழப்பிற்கான எதிர்பார்ப்பும் மிக அதிகமாக உள்ளதுடன் நெடுங்கால நலனையே கருத்திற் கொள்ள வேண்டுமெனவும் பங்குச் சந்தை அதிகரித்த சந்தர்ப்பங்களில் மிகக் கூடிய நலன்கள் பெறப்பட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

(iii) 1 ஆம் பலகை 2 ஆம் பலகை முதலீடாக 2012 ஆம் ஆண்டில் 25 கம்பனிகளின் 13,046,750 பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 226,125,038 மூலம் சபை எதுவித வருமானத்தையும் பெற்றிருக்கவில்லை. கடந்த 3 ஆண்டு காலப்பகுதியின் போது அவ்வாறாக வருமானம் எதனையும் பெறாத சபையின் முதலீடுகளுடன் தொடர்புடைய கம்பனிகளது விபரம் வருமாறு

| ஆண்டு | கம்பனிகளின் எண்ணிக்கை | முதலீட்டுப் பங்கு எண்ணிக்கை | முதலீட்டுத் தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 2010 | 17 | 4,111,468 | 119,083,880 |
| 2011 | 18 | 7,683,979 | 163,867,080 |
| 2012 | 25 | 13,046,750 | 226,125,038 |

(iv) நிதியத்திற்கு பங்கு முதலீடுகளால் பெறும் வருமானத்தில் குறைவு ஏற்படுதல் மற்றும் தொடர்ச்சியாகப் பங்குச் சந்தையில் பங்குகளின் விலை வீழ்ச்சியடைதல் என்பவற்றைக் கருத்திற்கொள்ளாது 2012 ஆம் ஆண்டின் போது நிரலிடப்பட்ட 42 கம்பனிகளின் பங்குச் சந்தைப் பங்குகளில் ரூபா 1,810,894,725 க்கான 23,240,912 பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2013 ஜுன் 30 ஆந் திகதியளவில் இவ்வாறாக 26 கம்பனிகளில் ரூபா 879,359,901 க்குப் பதிலாக கொள்வனவு செய்யப்பட்ட 8,030,618 பங்குகளின் பெறுமதி பங்குச் சந்தையில் ரூபா 248,609,303 ஆல் வீழ்ச்சிக்குள்ளாகியிருந்தது.

(v) 1997 – 1999 காலப்பகுதியின்போது நிரலிடப்பட்ட 3 கம்பனிகளில் 4,067,500 பங்குகளில் சபை முதலீடு செய்திருந்த தொகை ரூபா 485,834,544 ஆகும். அம் மூன்று கம்பனிகளிலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது பெறப்பட்ட வருமானமும் வருமான சதவீதமும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2011 | | 2012 | |
|---|---|---|---|---|---|
| **கம்பனி** | **முதலீடு** | **வருமானம்** | **சதவீதம்** | **வருமானம்** | **சதவீதம்** |
| | **ரூபா** | **ரூபா** | **%** | **ரூபா** | **%** |
| 1 | 14,248,606 | இல்லை | - | இல்லை | - |
| 2 | 625,000 | 93,750 | 15 | 93,750 | 15 |
| 3 | 470,960,937 | 12,600,000 | 2.67 | 12,600,000 | 2.67 |
| மொத்தம் | 485,834,544 | 12,693,750 | 2.61 | 12,693,750 | 2.61 |

நிரலிடப்பட்ட இக் கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டு வருடாந்தம் பெறப்பட்ட ஒட்டு மொத்த வருமான சதவீதம் 2.61 ஆகும். ரூபா 14,248,606 முதலீடு செய்யப்பட்ட கம்பனியிலிருந்து 2011, 2012 ஆம் ஆண்டுகளில் வருமானம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. இப் பங்குகள் யாவும் பங்குச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தப்பட முடியாதனவாக இருப்பதால் மூலதன இழப்பு அல்லது பணத்தை மீளப் பெறாது போகும் அபாயம் விலகியது.

(vi) 2006 செப்டெம்பர் தொடக்கம் அமுலாகிய சபையின் முதலீட்டுக் கொள்கைக் கூற்று 2012 திசெம்பர் 01 ஆந் திகதி மீளத் திருத்தியமைக்கப்பட்டது. இது தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

- 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டத்தின் 8(அ) மற்றும் (ஈ) பிரிவுகளின் கீழ் சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரம் சபையால் நேரடியாக அமுலாக்கப்படாது அதற்கு இணையான பங்குச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுக்கான முதலீட்டுக் கொள்கை கூற்றில் 2006 செப்தெம்பர் 4.1 (பீ) மற்றும் 2012 திசெம்பர் 4.2 (ஏ) xi என்பவற்றின் மூலம் சபையால் தனது பதவியணியினர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுதலானது கேள்விக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.
- இணைப்பு “ஏ” இல் குறிப்பிடப்பட்ட பங்குகளை அல்லது கூறுகளை இழப்புடன் விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்துடன் தொடர்புடைய பிரிவுக்குப் பதிலாக பொதுத் திறைசேரியின் இசைவு மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் படி பங்குகளை இழப்புடன் விற்பனை செய்யலாம் எனும் பிரிவை உட்புகுத்தலாமேயல்லாது பங்குகளை அல்லது கூறுகளை இழப்புடன் விற்பனை செய்யலாம் எனும் இக்கொள்கை சிக்கல் நிறைந்ததாக அவதானிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் போது இக் கொள்கைப் பிரசுரத்தில் குறிப்பிடப்படும் அங்கீகாரத்திற்கமைய குறிப்பிட்டதொரு கம்பனியின் பங்குகள் ரூபா 16,429,168 இழப்புடன் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(vii) முதலீடு மேற்கொள்ளப்பட்ட 2 கம்பனிகளின் 624,570 பங்குகளில் ரூபா 25,227,541 அக் கம்பனிகளது கணக்கொழிப்பு நடவடிக்கைகள் காரணமாகவும் 178,700 பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 4.066,314 அக் கம்பனிகளின் பெயர்கள் நிரலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து நீக்கப்பட்டதாலும் 2000 ஆம் ஆண்டிற்குக் கிட்டிய காலமாக சபையால் முதலீட்டுத் தொகையான ரூபா 29,239,855 பெறப்பட முடியாதும் வட்டி வருமானமின்றியும் இருந்தது.

(viii) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 1 ½ முதல் 14 ஆண்டுகளான மூலதனப் பங்குச் சந்தையில் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றிராத 06 கம்பனியில் முதலீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 93,074,734 ஆகும். இவ்வாறாகப் பங்குச் சந்தையில் இம் முதலீடுகள் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுத்தப்படாமையால் மூலதன இலாபத்தைச் சபை பெற முடியாதிருந்தது.

(ix) 2011 ஜனவரி 01 இல் உள்ளவாறு பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 5,204,377,279 தொகையானது 2012 ஜனவரி 01 ஆந் திகதியளவில் ரூபா 7,713,996,715 வரை அதிகரித்திருந்தது. எனினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது பங்குகளை விற்பனை செய்தமையால் பெறப்பட்ட மூலதன இலாபக் குறைவு ரூபா 430,572,328 ஆகும். இக் குறைவு 77.6 சதவீதமாகும்.

(x) சபையின் 2012 ஜனவரி 01 இல் உள்ளவாறான 1 ஆம் பலகை 2 ஆம் பலகை எனும் 104 கம்பனிகளிலான முதலீடு ரூபா 7,228,104,572 ஆகும். இதில் 76.64 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 5,539,965,503 முதலீடு செய்யப்பட்டது 22 கம்பனிகளில் ஆகும். இது தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

ஒட்டு மொத்தமாக இந்த 22 கம்பனிகளிலும் முதலீடு செய்யப்பட்டவற்றால் பெறப்பட்ட வருமானம் 4.28 சதவீதமாகும். 6 கம்பனிகளைத் தவிர, ஏனைய 16 கம்பனிகளிலிருந்து நிதியம் பெறாத வருமானம் மிகக் குறைந்த 0.17 முதல் 4.28 சதவீதமே ஆகும். இதற்குப் பதிலளித்த தலைவர் ‘‘மூலதன வருமானத்தைப் பெற முடியாது போனமையால் பெறக் கூடிய இலாப சதவீதம் குறைந்துள்ளது’’ எனத் தெரிவித்திருந்தார்.

(இ) 2013 ஜுன் 30 ஆந் திகதியளவிலும் 02 கம்பனிகளது தொகுதி கடன் மற்றும் உத்தரவாதப் பத்திரம் ஆகியவற்றில் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பெறப்பட வேண்டிய முதலீட்டு வட்டியான ரூபா 27,854,580 பெறப்பட முடியாதிருந்தது. இதற்குப் பதிலளித்த தலைவர் ‘‘ஒரு கம்பனி நிதி நெருக்கடிக்குள்ளாகியதுடன் ஏனைய கம்பனிக்கு எதிராக நீதிமன்ற வழக்கொன்று இருப்பதால் இத் தொகையை அறவிட முடியாதுள்ளது’’ எனத் தெரிவித்திருந்தார்.

(ஈ) குறிப்பிட்டதொரு நம்பிக்கைப் பொறுப்புக் கூறில் 1997 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 1,000,000 கூறுகளில் ரூபா 10,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்தது. இந் நம்பிக்கைப் பொறுப்புக் கூறுகளைக் கொள்வனவு செய்த ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை அம் முதலீட்டின் மூலம் சபை எதுவித நலனையும் பெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டில் மாத்திரம் இதனைத் திறைசேரி உண்டியலில் முதலீடு செய்திருப்பின் அதன் மூலம் பெறக்கூடியதாக இருந்த மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 1,169,000 ஆகும்.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) தேவைகளை முறைப்படி உணர்ந்து, அதற்கேற்பக் கொள்வனவு செய்யப்படாமையால் 2012 ஆம் ஆண்டு இறுதியளவில் பயன்படுத்தாது களஞ்சியத்தில் எஞ்சியிருந்த சீருடைகளின் பெறுமதி ரூபா 2,183,775 ஆகும். 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்து வரும் சீருடைக் கையிருப்பைக் கைதவிர்ப்புச் செய்வது மீளாய்வாண்டு வரை நடைபெறாதிருந்தது.

(ஆ) 1998 ஆம் ஆண்டில் ரூபா 2,090,600 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட வாகனம் ஒன்று அரசாங்க விலைமதிப்பீடின்றி 2012 ஆம் ஆண்டில் பிரசித்த விலைக் கோரலையடுத்து ரூபா 832,000 க்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. இவ் வாகனம் விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் தனியார் துறை விலை மதிப்பீடு ஒன்றின் பிரகாரம் அதன் சந்தை விலை ரூபா 1,300,000 ஆகவிருந்தது.

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

சட்டமா அதிபரிடம் வினவாது கம்பனி ஒன்றுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை மீறலின் காரணமாக குற்றஞ் சாட்டப்பட்ட நபர்களால் சபைக்கு எதிராக மேன்முறையீடு செய்து அதற்கமைய நீதிமன்றக் கட்டளை ஒன்றின் பிரகாரம் புகார் செய்த கம்பனிக்கு ரூபா 21,900,000 கொடுப்பனவு செய்யப்பட்டமை தொடர்பான மேன்முறையீட்டின் விளைவாக அக் கம்பனி நீதிமன்றத்தில் வைப்பிலிட்ட வங்கிப் பிணைமுறியின் பெறுமதி சபை திருப்பிப் பெற வேண்டிய தொகையாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. இந் நீதிமன்ற நடவடிக்கைகள் 2013 ஜூன் 30 ஆந் திகதியளவிலும் முடிவுறாதிருந்தன. இத் தொகையைக் கொடுப்பனவு செய்தல் சாதகமற்ற நீதிமன்ற நடவடிக்கைகளின்

விளைவாக அமைவதால் பணத்தைத் திருப்பிப் பெறுவது சந்தேகத்துக்கு இடமாகக் காணப்பட்டது.

**3.4 இனங்காணப்பட்ட இழப்புகள்**

2009 ஜூன் மாதத்தில் ரூபா 4,473,200 கொடுப்பனவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 3 ஒரே வகை வாகனங்கள் ஏறக்குறைய 3 ஆண்டுகளுக்குள் தனியார் துறை நிறுவனம் ஒன்றின் ரூபா 1,900,000 மதிப்பீட்டிற்கமைய கேள்விகள் கோரப்பட்டு ரூபா 1,901,000 க்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. இவ் விற்பனையால் ஏற்பட்ட இழப்பு ரூபா 363,590 ஆகும்.

**3.5 நோக்கங்களுக்கு முரணான செலவினம்**

திறைசேரியின் அங்கீகாரம் இன்றி, சபையின் நோக்கங்களுக்கு முரணாக, சபையின் உத்தியோகத்தர்களால் நடாத்தப்படும் விளையாட்டுக் கழகத்திற்கு எதுவித உடன்படிக்கைக் கடப்பாடும் இன்றி ரூபா 2,000,000 மீளாய்வாண்டின் போது கடனாக வழங்கப்பட்டிருந்தது.

**3.6 அங்கீகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சபையானது கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச் சட்டத்தின் கீழ் இயங்கும் நிறுவனமாகும் எனக் குறிப்பிட்டு மேலதிக நேர வேலையின் போது 1 மணித்தியாலத்திற்கு 1 ½ மணித்தியாலமாகவும் சனிக்கிழமை / ஞாயிற்றுக் கிழமை மற்றும் அரச விடுமுறை தினங்களில் 8 மணி மேலதிக நேர வேலை முடிந்ததும் நாட் சம்பளமும் சேர்த்துக்கொள்ளப்பட்டு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்படுவதால் 2012 ஆம் ஆண்டிற்கான சபையின் மேலதிக நேர வேலைக் கிரயம் ரூபா 16,986,225 ஆகவிருந்தது. அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் இவ்வாறாக மேலதிக நேர வேலைக் கொடுப்பனவைப் பெறுவதற்கு சபையின் உத்தியோகத்தர்கள் ஒரு வாரத்தில் 5 ½ நாட்கள் பணியாற்ற வேண்டும். வருடாந்த லீவு 21 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அதற்கு முரணாக உத்தியோகத்தர்களுக்கு வருடாந்தம் லீவு 42 நாட்களாகவும் வாரம் ஒன்றிற்கு 5 நாட்கள் வேலை எனவும் வசதியளிக்கப்பட்டிருந்தது.

**3.7 சபையின் வளங்களைப் பிற நிறுவனங்களுக்கு வழங்கல்**

2003 ஜுன் 06 ஆந் திகதிய பீஈ/டீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு மற்றும் நி.பி 502 (2) 11 அனுபந்தத்தின் 9 ஆம் நிரலுக்கு முரணாக முறையாக ஒப்படைக்கப்படாது சபைக்குச் சொந்தமான ரூபா 6,189,922 பெறுமதியான பீபீ 1089 இலக்க கெப் வண்டி சனாதிபதி செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ் வாகனம் சனாதிபதி செயலகத்தில் இருக்கையில் 2012 ஆம் ஆண்டில் பழுதுபார்த்தலுக்கும் வேலைக்குமாக சபை ரூபா 384,578 செலவிட்டிருந்தது. சனாதிபதி செயலகத்திலிருந்த இவ்வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்கு முன்னைய ஆண்டில் ரூபா 646,868 செலவிடப்பட்டிருந்தது.

**3.8 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு தொடர்பாக நிதியம் ஒன்றை உருவாக்குதல்**

மீளாய்வாண்டு முடிவில் உள்ள பணிக்கொடை நிதி தொடர்பான ரூபா 90,119,163 சம்பந்தமாக வேறாக ஒரு நிதியம் உருவாக்கப்பட்டு முதலீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 வாகனப் பாவனை**

மீளாய்வாண்டின் போது சபையின் 2 வாகனங்கள் விபத்திற்குள்ளாகியதால் ஏற்பட்ட ரூபா 214,665 இழப்பைக் காப்புறுதி மூலமோ அல்லது அதற்குப் பொறுப்பானவைகளிடமிருந்தோ அறவிடுவதற்கு சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விபத்திற்குள்ளான மேலும் 3 வாகனங்கள் சம்பந்தமாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்**

**4.1 கொள்வனவுத் திட்டம்**

தலைமை அலுவலகத் கட்டிடத் தொகுதிக்கு செலவிட எண்ணிய கிரயத்தைத் தவிர உள்ளவாறான கொள்வனவுகளுக்கும் கொள்வனவுத் திட்டத்திற்குமிடையேயான வேறுபாடுகள் ஏறக்குறைய 50 சதவீதமாக அமைந்திருந்தன. ஆகவே, எதிர்கால நிதியச் சுற்றோட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான கிரயம் ஆக்கபூர்வமற்றதாக அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

நி.பி 133(2) க்கமைய சபையின் சில முக்கிய அம்சங்கள் உள்ளடங்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு நடைபெற்றிருக்கவில்லை.

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

சபையின் பாதீடப்பட்ட செலவினத்தையும் உள்ளவாறான செலவினத்தையும் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்துவதில் மேலும் கவனஞ் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சபையின் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அறவிடப்பட வேண்டிய தொகை கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை

(இ) காலத்திற்கேற்ப அதிகாரச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள்

(ஈ) முதலீடு